# போர்வாள்


சிரியர்கள் : காஞ்சி. மணிமொழியார் | தனி இதழ் அணு 1½
ா. இளஞ்செழியன், B. A. (Hons.) | வெளிநாடு அணு 2

ள் || சென்னை, திருவள்ளுவர் ஆண்டு ௧௯௭௮
மார்கழி ௨௧
10—1—48 சனிக்கிழமை || வீச்சு 22


## 'தொலை நோக்கி'கள்

(தமிழ் ஒளி)

———

ாரதப் பாட்டுக்கள் பாடிடுவார்—கம்பன்
பாநயம் போற்றிடக் கூடிடுவார்
நேரினில் வாழும் கவிஞர்களை—இவர்
நேத்திரம் கொண்டுமே நோக்குகிலார் 1.

ாரதிப் பாடலைப் பாடுகிலார்—இவர்
பாரதி தாசனை நாடுகிலார்
சாரத் தமிழ்நயம் பேசிடுவார்—இந்தச்
சண்டிகள் நொண்டிக்கை வீசிடுவார்! 2.

சிலப்பதி காரமென் றார்த்திடுவார்—எங்கள்
சேர னிளங்கோ வென் றேத்திடுவார்
கலகலெனக் கவிதா னிசைக்கும்—இளங்
கவிஞரைக் காண மறுத்திடுவார்! 3.

தொலைவி லிருந்திவர் நோக்குகிறார்—நாட்டில்
தோழமை கொள்ளட்டும் அக்கணமே
லைகள் உயிருடைக் காவியங்கள்—தமைக்
காணுவர் தங்களின் கண்ணெதிரே! 4.

## பாரத தேவியே சொல்கிறது!

'மடங்களும்,ஆலயங்களும் என்ன நோக்கத்துடன் ஸ்தாபிக்கப்பட்டனவோ அந்த நோக்கங்கள் இன்று மருந்துக்குக்கூட இல்லையென்பது யாவருமறிந்த விஷயம்.'

'மக்களின் ஆத்மார்த்தமுன்னேற்றத்துக்காக ஏற்பட்ட கோயில்கள் இன்று பெரும்பாலும் சோம்பேறிகளின் சாவடிகளாய் இருக்கின்றன. கோவில்களில் அர்ச்சகர்கள் என்று இருப்பவர்களுக்கு சில மந்திரங்கள் தெரியும் என்பதைத் தவிர வேறு எந்த விதமான யோக்யதையும் கிடையாது. இவர்களில் பெரும்பாலோர் கடவுளின் மூர்த்தி இருக்குமிடத்தின் அருகே போவதற்கே லாயக்கற்றவர்கள். அவ்வளவு மோசமான வாழ்க்கை நடத்துபவர்கள் இன்று கடவுளின் 'கார்டியன்'களாக இருக்கிறார்கள். இத்தகைய இடங்களில் தெய்வ ஸாந்நித்யம் எப்படி இருக்கமுடியும்?

'மடங்களின் நிலைமையும் இதைவிட மோசமாயிருக்கிறது. சமயங்களின் சிறப்பைப் பிரபலப்படுத்துவதற்காக ஏற்பட்ட மத பீடங்கள் இன்று லீலா விநோதங்களின் பீடங்களாயிருப்பது நாமெல்லோரும் வெட்கித் தலை குனிய வேண்டிய விஷயம். மடாதிபதிகளாய் வருபவர்கள் தம்முடைய யோக்யதை காரணமாக வரவில்லை.

'எகிப்திய அரண்மனையின் சூழ்ச்சிகள் என்பது மகா பிரசித்தம். தமிழ்நாட்டில் உள்ள மடங்களில் அதே நிலைமைதான் இருந்துவருகிறது.

'இந்த நிலைமையில் நாஸ்திகம் பரவுவதும், ஜனங்கள் அதற்குச் செவி சாய்ப்பதும் தவிர்க்க முடியாத விஷயங்கள்.'—'பாரததேவி' தலையங்கம்—9-7-47.

# சாமி புண்ணியம்......!

(வ. இரா. கோ.)

ஜனவரி விடுமுறை. விடுமுறைக்கு வரும்போதெல்லாம் சேகர் மனம் வேறொன்றிலும் நாடவில்லை. அண்டைவீட்டுக் கயற்கண்ணி கமலத்தை அடைவதிலேயே சென்றது. ஆனல் அப்பாக்கியம் கிட்டுமோ என ஐயுற்ருன். காரணம்? அவள் வேறு வகுப்பு.

கமலம் அண்மையிலுள்ள பெண்கள் உயர்நிலைப் பள்ளியிலே படித்துவந்தாள். அவள் பள்ளிக்குச் சென்று திரும்பும்பொழுதெல்லாம் தவருமல் எதிர்நோக்கி வருவான். புன்னகை புரிவான். முல்லைச் சிரிப்பு அவள் முகத்தில் தோன்றும். மிடுக்காக நடந்து செல்லுவாள், கொஞ்சதூரம் சென்றதும் ஒருவரை ஒருவர் திரும்பிப் பார்த்துச் செல்லுவார். இவ்விதம் கழிந்த நாட்கள் பல.

கண்ணேடு கண் நோக்கிய காதலர்தம் கருத்து நிறைவேற சந்தர்ப்பம் கிட்டவில்லை. இன்று நாளை என்று விடுமுறையும் கழிந்தது. ஊருக்குப் புறப்படுவதற்கு முதல் நாள் மாலை, கமலத்தைக் கண்டு களிக்க சமயம் வாய்ந்தது.

"கமலம்! கமலம்!!"

"யார்! நீங்களா!"

"ஆம். நாளை ஊருக்குச் செல்கிறேன்."

"ஊருக்கா!"

"இரவு எட்டு மணிக்கு, நம் வீட்டுத் தோட்டத்தில் சந்திக்கிருயா"

"சரி"

அன்று அவளுக்கென வாங்கிய ரிப்பனுடன் காத்துக்கொண்டிருந்தான். அவளும் வந்தாள். ஏதோ பேசிக்கொண்டிருந்தனர்.

ஆந்தையின் அலறல். இருவரும் திடுக்கிட்டனர். கமலம் பதை பதைத்தாள்.

சேகர் சற்று மனம் தேறியவனய், 'ஒன்றுமில்லை கமலம். ஆந்தை. சென்று வருகிருயா?" என்ருன்.

"களிப்யூட்டினீர்கள். கைவிடமாட்டீர்களே!

"கண்டிப்பாய் மணப்பேன் கண்ணே."

விடைபெற்ருன். பிரிந்தனர்.

திருச்சி வந்தடைந்தான் சேகர். மனம் நிம்மதியிலில்லை. படிப்பிலும் ஓடவில்லை, அவ்வளவாக முன்போல். நண்பர்களுடனும் அதிக அளவளாவுவதில்லை. 'எப்பொழுது ஊர் சென்று அவளைக் கண்டு குலவி இன்புறுவோம்' என்றுதான் எண்ணினன்.

தேர்வும் நெருங்கியது. ஒருவாறு தேர்வையும் எழுதி முடித்தான், வீடு வந்து சேர்ந்தான். கமலத்தைக் காண ஆவல்கொண்டான். ஆனல் அவள் வெளியில் வந்தால் தானே! கமலத்தைக் காணுமல் காலங் கழிப்பது கடினமாய் இருந்தது. அவளைப்பற்றிப் பிறரிடம் வினவ அஞ்சினன். "அவள் பள்ளி செல்வதை நிறுத்திவிட்டாளா என்ன? அவ்விதம் நிறுத்திவிட்டால் காரணம் என்ன?" என்றெல்லாம் தன்னைத்தானே கேட்டுக்கொண்டான்.

எப்பொழுதும் அவள் நினைவுதான். அவளுடன் உல்லாசமாய் வாழ்க்கையை நடத்துவதாய்க் கனவில் கண்டு களித்தான், கனவென அறிந்ததும் கவலையே அதிகரித்தது. அன்று அதிக நேரம் உறங்கிவிட்டான். கொல்லைப்புறம் சென்று "பிரஸ்பேஸ்ட்" டுடன் கிணற்றண்டை உட்கார்ந்தான். அங்குள்ள தென்னை மரத்தின் உச்சியை நோக்கியவாறிருந்தான். கண்கள்தான் அங்கு. கருத்தெல்லாம் கமலத்தின்மீதே.

கமலத்தின்வீட்டிற்கும் தன்வீட்டிற்கும் கொல்லைப்புறம் ஒரு சிறு கட்டைச் சுவரால் தான் பிரிக்கப்பட்டிருந்தது.

தண்ணீர் இறைக்கும் சப்தம் கேட்டது. அத் திக்கை நோக்கினன். ஆச்சரியப்பட்டான். கண்களைத் துடைத்தான். மீண்டும் உற்று நோக்கினன். சந்தே மில்லை, கமலமேதான். பு னகை தவழ்ந்து விளையாடிய ம முகம் பொலிவு இழந்திருந்த அழகுக் கழகு செய்ய ஆபரண ஒன்றும் காணேம். வெண்டு உடுத்தியிருந்தாள். முன் போ கோலப் பின்னலிட்ட கூந்த இல்லை. கூந்தல் எண்ணெய்கண் தாகத் தெரியவுமில்லை! வெளியி காணப்படாத கமலம் 'விதவை என்ற போர்வையில் இருப்ப உணர்ந்தான். தலை கிறு கிறுத்த காண்பது கனவா நினைவா எ ஐயுற்ருன். தன்னையும் அறியாம 'கமலம்' என்றழைத்தான், நல் வேளை, அங்கு ஒருவரும் இல் அவ்வளவுதான். அவளது துக்க மேலிட்டது. ஏதோ சொல் வாயெடுத்தாள். பேச 'நா' எ வில்லை, விம்மி விம்மி அழுதா கண்ணீர் விரைந்து கன்னத்தி ஓடியது. தண்ணீர் இறைக்கு கயிற்றை நழுவவிட்டாள்.

'தடால்' என்ற சப்தம்

'கமலம்! கமலம்' எனக் கதறி கொண்டு உயிரைக் கையில் பிடி வண்ணம் ஓடோடியும் வந்தா தாய் முனியம்மாள்.

"என்னம்மா அழுகிறே"

"கடகால் விழுந்துவிட்டது"

"இதற்குத்தானு அழுவது"

மேலும் தேம்பித் தேம்பி அ தாள்.

"ஏனம்மா, சும்மா, நின நேரமெல்லாம் அழுதுகொண் யிருந்து என்ன செய்வது. உ கிட்டது அவ்வளவுதான்' என் கூறி அழைத்துக் சென்ருள்.

சேகர் மனதில் ஒரு பெ புயல் எழும்பியது. தன் தா வினவினன்.

"அதை ஏனப்பா கேட்கி பெரிய வயிற்றெரிச்சல்" என்

"ஏனம்மா" என்ருன்.

"அதுதான், சுந்தரத்தை உ குத் தெரியாதா!"

"ஆமாம். அவன் என் பள் சிநேகிதன். இப்பொழுது 'எ ட்ரிக்' கார்பொரேசனில் 'இ மென்'ஞக வேலை பார்த்த கிருன்.',

(11-ம் பக்கம் பார்க்க)

# போர்வாளின் திறன்கண்ட படைத் தலைவர் பெருமகிழ்ச்சி.



'போர்வாள்' பத்திரிகை ற்றி எனக்கு விஷயம் நன் கத் தெரியும். எப்படி ன்றால், நான் செல்லும் டங்களிலெல்லாம், நமது யக்கத் தோழர்களிற் ரும்பாலோர் 'போர்வாள்' ர வெளியீட்டைப்பற்றி ன்னிடம் வந்து சொல்வதாலும், அதைப் பாராட் ப் பேசுவதாலும், அதன்மீது எனக்குப் பொறாமை'' ஏற்படும் அளவுக்கு அதைப்பற்றித் ரிந்திருக்கிறேன்.

போர்வாள் பத்திரிகையைப் பற்றிய என் த்தைச் சுருக்கமாகச் சொல்லவேண்டுமானுல், பார்வாள் பத்திரிகையைக் கண்டு, அதற்குப் தாமக்களின் பாராட்டு இருப்பதை உணர்ந்து, பத்திரிகைக்காரர்கள், தங்கள் போக்கை மாற் க்கொண்டு, போர்வாளின் போக்கைப் பின் ற்றுகிருர்கள் என்றே சொல்லவேண்டும்.

மற்றும், போர்வாளின் போக்கு, இயக்கத் -த்திலும் என்னிடத்திலும் பற்றுதலும் நம்பிக் யும் கொண்டதாக இருப்பதையும் காண் றேன்.

திராவிடநாட்டில், போர்வாள், நீண்டநாள் விளின்று, இதே போக்கில் தொண்டாற்றி வேண்டுமென்கிற ஆசையும், அதுபோலவே ாண்டாற்றிவரும் என்ற நம்பிக்கையும் கொள் றன்.

ன்னே, }
-1-48. }

ஈ. வெ. ராமசாமி.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தொழில் வளர்ச்சி பெற்று, புது வாழ்வு வாழ இயலும்? ஆகை யால்தான் தோழர் ஜி. டி. நாயுடு குறிப்பிட்டார், மற்ற பல பிரச் சினைகளைக் கவனிக்குமுன்னுல், சென்னை அமைச்சர்கள் முதலில் தங்கள் சுதந்தரத்தை நிலைநாட்டிக் கொள்ளவேண்டுமென்று!

**"சென்னை அமைச்சர்கள், ஒன்று, டில்லி அரசியலார்க்குத் தலை வணங் கத் தேவையில்லாத புதிய நிலை பெற வேண்டும்; அல்லது, மத்ய சர்க்கார் என்ற அமைப்பையே விட்டுத் தொலைத்து வெளியேறிவிடவேண்டும். இல்லையென்றுல் நம் மக்கள் முன் னேற்றத்திற்கான பணி எதுவுமே செய்ய முடியாது போய்விடும்."—** இந்தக் கச்சிதமான வார்த்தை களில், தோழர் நாயுடு, அமைச் சர்கள் செல்லவேண்டிய பாதை இது என்பதைத் திட்டமாக, தெளி வாக, அழுத்தந் திருத்தமாக, எடுத் துக் காட்டியிருக்கிருர். அமைச் சர்கள் மட்டுமல்ல, திராவிட நாடே செல்லவேண்டிய பாதை இதுதான். திராவிடர் கழகம் நாட்டு மக்க ளுக்கு நீண்ட காலமாகவே சுட்டிக் காட்டிவரும் ஒரே வழியும் இது தான். வடநாட்டுத் தளை தென் னுட்டைச் சுற்றி வளைத்து இறுகப் பிணித்திருக்கும்வரை தென்னுடு நிமிர்ந்து பார்க்கவே முடியாது. நிமிர்ந்து பார்க்கவே முடியாது என் றுல், அது, ஆற்றல் நடைபோட்டு நடப்பதுதான் என்றைக்கு? புரட் சிப் புனலில் நீராட்டப்பட்ட புத்தம் புதியதோர் சமுதாயத்தை உரு வாக்குவதுதான் எந்த நாளில்?

வடக்கு, தெற்கை, வீழ்த்தவே செய்கிறது என்பதை, ஆதாரபூர்வ மான முறையில், அசைக்க முடி யாத சான்றுகளுடன், எவர்க்கும் விளங்கும் வகையில், எவரும் ஒப்பும் நிலையில் அழகுபட எடுத் துக்காட்டினுர் தோழர் நாயுடு. அவ் வளவும் கேட்டுக்கொண்டிருந்து விட்டு, "வட நாட்டின்மீது, நாயுடு வுக்கு, ஏன் கோபம், தெரிந் திலனே!" என்று புதிய பண் இசைக்கிருர் அமைச்சர் சீதாராமர். மந்திரி ராகவ மே னனே பேசுகிருர், நாயுடு எனக்கு ஒரு புதிர் என்று; என் செய்வது? திராவிடம் இந்தத் துர்ப்பாக்கிய நிலையில்தான் இன்று இருக்கிறது!

# வடக்கு உயர்ந்தது! தெற்கு தாழ்ந்தது!

## மோட்டார் மன்னர் பேசுகிறார்! அமைச்சர் 'ஆம்' என ஒப்புகிறார்!

### அறிஞர் நாயுடு அறிவிக்கும் பயங்கரத் தகவல்

"நாம் இயந்திரங்களை உற்பத்தி செய்யத் தொடங்காதவரையில், நம் நாடு, சிறப்பாக நம் மாகாணம் தொழில் வளர்ச்சித் துறையில் ஓர் அங்குலம் கூட முன்னேற முடியாது என்பது மட்டுமல்ல, நம் மக்களின் வாழ்க்கைத் தரமும் உயராது; நம் நாட்டை நாம் பாது காத்துக் கொள்வதும் முடியாது.

"இந்த உண்மையை நன்கறிந்த காரணத்தால் தான், நான், சென்னை அட்வைசர்ஆட்சி இருந்த காலத்தில் இயந்திர அமைப்புச் சாலை ஒன்று நிறுவுதற்கான முழுத் திட்டமும் தெளிவாக வகுத்து, அந்த 'ஆளவந்தார்' களிடம் கொடுத்தேன். திட்டம் திட்டியதோடு அமையாது, நானே, அந்த திட்டத்தை நடைமுறையில் கொண்டுவருவதற்கான பொறுப்பு ஏற்றுக் கொள்ளவும் முந்தினேன். அரசியலார், இயந்திர அமைப்புச் சாலை துவக்குவதாயின், நான், மாதம் ஒரு ரூபாய் சம்பளத்தில் (அதாவது சம்பளம் இல்லாமல்! ஏனெனில் ஒரு ரூபாய் சம்பளம் ஒரு சம்பளம் இல்லை அல்லவா! —ஆசிரியர்) அந்த இயந்திரச் சாலையின் தொழில்துறை டைரக்டராக இருப்பதற்கும் நான் ஒப்புக்கொண்டேன். இறுதியில் நடந்தது என்ன தெரியுமா? சென்னையிலோ அல்லது டெல்லியிலோ உள்ள அரசியல் அலுவலகத்தில் எங்கோ ஒரு ஒதுக்கிடத்தை அது அடைந்து விட்டது. நம்முடைய சொந்த சர்க்கார் வந்தவுடனே அந்தத் திட்டம் என்ன ஆயிற்று என்பதைக் கண்டறியச் சென்றேன். ஆனால் அந்த திட்டமும் அதன் தொடர்பான பிற கட்டுகளும் எங்கே போயின என்பதை யாராலும் கண்டுபிடிக்க முடியவே இல்லை!

"பிறகு, நான், வேறொரு முயற்சி செய்தேன். பஸ்கள், லாரிகள், மின்சார மோட்டார்கள் முதலியவற்றை உற்பத்தி செய்யும் பெரிய தொழிற்சாலை ஒன்றை இங்கே சென்னை மாகாணத்தில் அமைப்பதற்காக, குறிப்பிட்ட தொகை ஒன்றை, முதலாக வைக்கும் படி, டெல்லி சர்க்காரை நான் கேட்டுக் கொண்டேன். அதற்காக நான் தயாரித்த அறிக்கையில், மேற்படி தொழிற்சாலை சர்க்காருடைய பணத்தில் சர்க்காருடையதாகவே நடத்தப்படலா மென்றும், ஆனால் அதை நடைமுறையில் நிர்வாகம் செய்யும் பொறுப்பைத் தனிப்பட்டவர்களிடம் ஒப்படைக்கலா மென்றும் அவர்களுக்கு, வரும் இலாபத்தில் பத்தில் ஒரு பங்கு கொடுக்கலா மென்றும் நான் குறிப்பிட்டிருந்தேன். நான் வகுத்த அந்த திட்டப்படி மோட்டார் தொழிற்சாலை அமைக்கப் பட்டிருந்தால், அதில் உற்பத்தியாகும் மோட்டார்கள் குறைந்தது பத்து ஆண்டுகளுக்கு வேறு எந்த 'புது மோஸ்தர்' மோட்டார்களுக்கும், தரத்தில் கொஞ்சமும் குறையாது முன்னணியில் நிற்கும். அந்த திட்டப்படி குறைந்த விலையும் உயர்ந்த தரமும் உடைய மின்சார மோட்டார்களை, நாம், உள்நாட்டில் பயன்படுத்துவதற்கு மட்டுமல்ல, ஐரோப்பாவுக்கு ஏற்றுமதி செய்வதற்காகவும் கூட உற்பத்தி செய்ய முடியும். இந்த ஊரில் உள்ள தொழிற்சாலையில் செய்த மின்சார மோட்டார் இயந்திரங்களுக்கு விற்பனை உரிமை தரும்படி வேண்டி, இங்கிலாந்து கம்பெனி ஒன்று கடிதம் கூட எழுதியிருக்கின்றனர்.

"இயந்திர உற்பத்திச் சாலை, மோடார் உற்பத்திச் சாலை இரண்டையும் இம்மாகாணத்தில் தொடங்க வேண்டு மென்று இவ்வளவு முயற்சிகள் செய்தேனே, இவை யெல்லாம் என்ன ஆயின தெரியுமா?

"மோட்டார் தொழிற்சாலை
நான் விண்ணப்பம் போட்
சில வடநாட்டுக் கம்பெனிக
ணப்பம் போட்டன; பண
பெற்றன; தேவையான
சும் உடனே கிடைத்தது;
சாலைகளும் தொடங்கப்ப
மோடார்களும் உற்பத்திய
அவை மளமளவென்று செ
வும் செய்கின்றன. இ
ஆனபிறகு, வடநாட்டுக் கம்
தொழிலைத் துவக்கி நடத்திய
ஓர் ஆண்டுக்கும் பிறகு, டில்
கார், "நீங்கள் கேட்
பத்துக்கு ஒரு பங்கு கழிவு
ஆயிற்றே! கொஞ்சம் குறை
கொள்ளக் கூடாதா?"
கேட்டனர்!

* * *

"பம்பாய், வங்காள மா
களில் மூன்று மோட்டார் உ
சாலைகள் துவக்கப் பட்டிரு
வும் சென்னையிலும் ஒன்று
கப்படும் என்றும் அ
செய்தித் தாள்களில் படி
இந்த மோடார் தொழிற்சா
இங்கே துவக்குவதற்காக
சர்க்கார் சென்னை மாகாண
என்ன உதவியைச் செய்
நானறியேன்! சென்னை
சாலையை ஒரு பம்பாய் மு
தொடங்குவதாகத் தெரி
அப்போது, மத்திய சர்க்கா
மடவென திட்டத்தை நிறை
விடுவர் போலும்! ஆனால்
மாகாணத்தவனே சென்
மோடார் சாலையைத் தொ
தாயின் அப்போது இந்த
அவனுக்குக் கிடைக்கவே
காது!.....................

"பழங்கள், தானிய வ
பருத்தி இவை பற்றி சில
களை நான் நடத்தியிரு
சென்னை சர்க்காரின் பயி
அலுவலாளர்கட்கு இந்த
களில் கொஞ்சம் பற்று
கிறது என்று கூட நினைக்
ஆனாலும், அவர்கள், இந்த
சிகள் தேவைதானா என்
பற்றி இன்னமும் ஒரு
வரவில்லை. ஆம்! இந்த
சர்க்கார் எதற்கெடுத்தாலும்
சர்க்காரின் தாக்கீதுகளுக்கு
குனிய வேண்டி இருக்கிறது
நான் அறிவேன். இங்கே
செய்ய வேண்டுமானாலும்,
டில்லியின் ஒப்புதலைப் பெற
வேண்டியிருக்கிறது என
நான் அறிவேன். மத்திய

ன்றி, இவர்கள் ஒரு மூட்டை
க்கது அரிசியின் விலையை ஒரு
அளவு கூட ஏற்றவோ இறக்
முடியாது என்பதையும் நான்
ர். இத்தகைய சூழ் நிலையில
சென்னை அரசியலார் என்ன
செய்ய முடியும் என்பதே எனக்
ரியவில்லை. ஆகையால்தான்
சால்கிறேன், சென்னை மாகா
ர்களாகிய நாம் நம்முடைய
சுதந்தர சர்க்காரை—தனி
யப் பெறும் வரையில் உருப்
வேலை எதையும் செய்ய
என்பது உறுதி.”
ாட்டார் மன்னர்” என்றும்
னிந்திய நெப்பீல்டு” என்
ர் பெற்ற கோவைக் கோ
தாழர் ஜி. டி. நாயுடு, அண்
, சென்னை அமைச்சர்கள்
கு ஓர் விருந்து வைத்தார்.
கல்வி அமைச்சர் அவினாசி
ர் விருந்திற்கே வரவில்லை.
திருவாளர்கள் சீதாராம
பார்க்கும் ராமன் மேனனுக்
தாழர் நாயுடு வாசித்துக்
த வரவேற்புத் தாளில்
படும் சில வாசகங்களே
உள்ளவை.
திற்குத் தான் அழைத்தார்
ஆனால் விருந்திலே மருந்து
தார், காரமான பல
மகளை எடுத்துக் காட்டி
மைச்சர்களுக்கு.
ல தேநீர் கிடைக்கும்—பழ
சனமும் நிறையக் கிடைக்
ண்பர்களையும் பார்க்கலாம்-
ச் ‘சுவை’யும் தேடலாம்
எண்ணத்தோடுதான் நான்
ர். ஆனால் வந்த இடத்
மிஸ்டர் நாயுடு என்னை அதி
யத்திற் குள்ளாக்கிவிட்
என்றுராம் சீதாராம
யார், விருந்தையும் தோழர்
கொடுத்த மருந்தையும்
பிறகு.
ர் நாயுடு கொடுத்த மருந்து
மயிலேயே காரமானது
அது சர்க்கரை பூசின
னக் கட்டி அல்ல இனிக்க!
ம்! சுக்கு மிளகு திப்பிலி
ன் கூட்டுச் சரக்கு!
போடு வந்த அமைச்சர்கள்
ம் கசப்போடுதான் சென்றி
கஷாயம் கசப்பைத்தானே
பல நன்மைகளையும் கூட
ம்! மெய்தான் — அது
தான் அமைச்சர்களும் பல
மகளைத் தெரிந்துகொண்டு
யாயினர்.

“நண்பர் நாயுடு வடநாட்டின் மீது மிக மிக வெறுப்புக் காட்டுகிறார். அவருடைய இந்தப் போக்குக்குக் காரணம் தெரியவில்லை எனக்கு. ஆனால் ஒன்று தெரிகிறது எனக்கு. தென்னிந்தியாவில் உள்ள நாம் வடநாட்டவர்போல முன்னேறவில்லை என்பதும் தொழில்துறையில் நாம் மிக மிகப் பின்னணியில் உள்ளோம் என்பதும் எனக்குத் தெரிகிறது நன்றாக”

சொன்னார் சீதாராம ரெட்டியார் இதுபோல, நாயுடுவின் பேச்சைக் கேட்ட பிறகு! சீதாராம ரெட்டியார் சொல்கிறார் என்றால் அவர் தக்க ஆதாரத்தோடு சொல்கிறார் என்று பொருள்' ஏனெனில் அவர்தான் சென்னை மாகாணத் தொழிற்சாலை அமைச்சர். பொறுப்பற்ற விதமாகவோ, ‘ஏனோ தானோ’ மெட்டிலோ, அவர் வார்த்தைகளை வீசியிருக்க முடியாது. அமைச்சர்! ஆகவே அளந்துதான் பேசியிருப்பார். அவருடைய துறை அது. ஆகவே அறிந்து தான் பேசியிருப்பார். அளந்தும் அறிந்தும் பேசிய அமைச்சர் வாசகம் தெரிவிக்கிறது தொழில் வளர்ச்சியில் தென்னாடு வட நாட்டை விட மிகவும் தாழ்ந்துள்ளது என்று.

தேசத் துரோகிகளின் கூச்சல் ஆகவே தள்ளு அதனை என்று சொல்லவோ வழியில்லை—தேச பக்தர் கூடாரத்திலிருந்து தான் இந்த முழக்கம் எழுகிறது.

இருக்கும் மந்திரி சபையைக் கவிழ்க்க, நாளை, புதிய அமைச்சுக் குழு ஏற்படுத்த இருப்போர் பேசினார் இவ்வண்ணம் என்று சொல்லி மறுப்பதற்குமில்லை, சொன்னவர் இன்றைய அமைச்சர்.

ஆம்! வடக்கு உயர்ந்தது! தெற்கு தாழ்ந்தது! இதை இப்போது தெரிவிப்பவர் அமைச்சர், சீதாராமர். தலைவர் பெரியார் அல்ல!

உயர்ந்த வடக்கு தாழ வேண்டுமென்று எதிர்பார்ப்பது மனிதத் தன்மையல்ல. ஆனால் தாழ்ந்த தெற்கு உயர வேண்டுமென்று கேட்பது நியாயந்தானே! கேட்டாரா அமைச்சர்? கேட்க மறந்தார்.

ஆனால் கேட்டார் தோழர் நாயுடு. தென்னாடு தொழில் வளத்தில் தாழ்த்தப் பட்டு விட்டது—அதை உயர்த்த வேண்டுமென்று கேட்டார். மோட்டார் உற்பத்திச் சாலையும் இயந்திர அமைப்பு நிலையமும் நான் அமைக்கிறேன் என்று சொல்லிக் கேட்டார். சர்க்காரே அமைப்பதாயினும்கூடச் சரி, நான் கௌரவ டைரக்டராக இருக்கிறேன் என்று சொல்லிக் கேட்டார், சென்னை அரசியலாரை மட்டுமா, டில்லி தர்பாருக்கும் கூடத்தான் மனுப் போட்டுக் கேட்டார். மாண்டுபோன அட்வைசர் ஆட்சியிலும் கேட்டார். இன்றுவந்த சுதந்தர சர்க்காரையும் கேட்டார்.

கேட்டார்! மீண்டும் கேட்டார்! மறுபடியும் கேட்டார்! கேட்டுக் கொண்டே இருந்தார்.

பதில்—?

வந்தது!

இவருக்கல்ல!

பிர்லாவுக்கு!

விளைவு—?

“ஹிந்துஸ்தான் 10”—அங்கே! சோர்வும் சோகமும்—இங்கே! பிர்லா பிறகுதான் கேட்டார்; நாயுடு முதலில்தான் கேட்டார். ஆனால் மோட்டார் உற்பத்திச்சாலை அமைக்கும் உரிமை கிடைத்தது பிர்லாவுக்குத்தான். நாயுடுவுக்கல்ல. இவருக்குக் கிடைத்தது ஏமாற்றம்தான். திட்டங்கள் தீட்டினாரே, புதிய எண்ணங்களையும் ஏற்பாடுகளையும் அரசியலார்க்குச் சுட்டிக்காட்டினாரே, இன்னின்ன தொழில்களை இந்த இந்த முறையில் செய்யவேண்டும் என்று எடுத்து விளக்கினாரே. புள்ளி விவரங்களுடன், அதுதான் மிச்சம்! பிர்லா பிர்லாவாக இருந்த காரணத்தால் உரிமை பெற்றார். நாயுடு நாயுடுவாக இருந்த காரணத்தால் தொழில் உரிமை பெறவில்லை. நாட்டின் தொழில் வளத்தை வேண்டிய திசையெல்லாம் திருப்பும் சாவி டில்லி மார்வாரி கையில் இருக்கிறது. ஆனால் அந்தச் சாவியோ பிர்லா சொன்னபடி திரும்பும். பிறகு, நாயுடு, தென்னாட்டில், மோட்டார் தொழிற்சாலை எவ்வாறு நிறுவ இயலும்? நாயுடுமட்டுமல்ல, வேறு தென்னாட்டவர் எவரால்தான், மோட்டார் தொழிற்சாலை மட்டுமல்ல—வேறு எந்தப் புதிய முதன்மையான தொழிற்சாலையைத்தான் நிறுவ இயலும்? இந்த “மிச்ச இந்தியா”வை ஆளும் உரிமையும் இதன் பொருளாதாரப் பிடியும் வடநாட்டவரிடம் இருக்கும்வரை தென்னாடு எப்படித் தலை நிமிர்ந்து நின்று,

(8-ம் பக்கம் பார்க்க)

போர்வாள்

10—1—48 சனிக்கிழமை

# உன்னையே நீ எண்ணிப் பாரு!

ஜனவரி 4ம் நாள் பர்மா—நம் அண்டை நாடு—முழு விடுதலை பெற்று விட்டது. அன்று, எத்தனையோ ஆண்டுகளாக அந்த நாட்டு மக்கள்மீது திணிக்கப்பட்டிருந்த அடிமை வாழ்வு அகன்றது; புதிய பர்மா பிறந்தது; விடுதலை ஞாயிறும் கீழ்த்திசை வானத்தில் தன் பொன்னொளி காட்டி எழுந்தது; காலை மலர்ந்ததென மாந்தரெலாம் தங்கள் கண் மலர்ந்தே நடமாடவும் தொடங்கினர்.

விடுதலை! உரிமை! சுதந்தரம்! கட்டற்ற வாழ்வு! எவர்க்கும் தலைவணங்கத் தேவையில்லாத நிலைமை! தன்னைத் தான் ஆளும் பெருமை! எனக்கு நானே தலைவன் என்று எக்காளமிட்டுக் கூவும் இன்பப் புதுத் தலைமை! இவை கிடைக்கின்றன எனில் எவருமே மகிழுவர். எவருமே [illegible], எந்த உயிருமே [illegible]. பர்மா விடுதலை [illegible] விட்டது; [illegible] [illegible]து. விடுதலை [illegible] ஏற்படும் இன் [illegible] இல்லையற்றது அந்த [illegible] வாழ்வை தொடக்க [illegible] பர்மியர்க்கு.

கூண்டிலிருந்து வெளியேறிய கிளி போல, சிறை மீண்டு புறம் ஏகும் கைதி போல, சர்க்கஸ் கொட்டகையிலிருந்து அறுத்துக் கொண்டோடிவிட்ட சிங்க ஏறுபோல, பெற்றோர் கட்டு நீங்கிய காதற் சிட்டுகளின் உள்ளம்போல, பர்மா, வெள்ளைப் பரங்கியின் கள்ளக் காவலிலிருந்து வெளியேறிவிட்டது. நம் வாழ்த்து அந் நாட்டவர்க்கு!

பர்மியர்கள் பெற்றிருப்பது, நாம் முதலிலேயே குறிப்பிட்டிருப்பது போல, முழு விடுதலை. தேசீய வாதிகளின் துள்ளல் நடையிலே நவில்வதானால், அவர்கள் பெற்றிருப்பது வெறும் சுயராஜ்யமா, அல்ல! பூரண சுயராஜ்யமா, அதுகூட அல்ல! பரிபூரண சுயராஜ்யம்!

அவர்கள் பெற்ற விடுதலை வாழ்விலே மவுண்ட் பேட்டன்கள் கிடையாது. கவர்னர்களாக இருந்து கொண்டு இன்பப் பவனி வந்து கொண்டிருக்க சர் ஆர்ச்சிபால்ட் நைகள் கிடையாது. மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் என்று நீட்டி நீட்டிப் பேசவேண்டிய தேவையோ சூழ்நிலையோ கிடையாது. "வெள்ளையன் வெளியேறித்தான் விட்டான்—ஆனாலும் வெள்ளை கவர்னர் ஜெனரல்கள் உண்டு" என

அரும்பத உரைகூறவே
டிய அடியார்க்கு நல்
கள் இல்லை, அப் புது
வில். ஏனெனில் அவர்
பெற்றிருப்பது ஜனவரி
ஆகஸ்டு 15 அல்ல! முழு
தலை! குடியேற்ற நாட்
மை அல்ல!

நேற்றுவரை நாடா
வந்த வெள்ளை கவர்னர்,
மியப் பாராளு மன்ற
விருந்து இறக்கப்ப
பிரிட்டிஷ் கொடி
கையிலேந்திக் கொ
திரும்பிச் சென்றுவிடு
அடுத்த கப்பலில்! இரு
கொண்டு, காஷ்மீர் பிர
னையை இப்படித் தீ
லாம் — திருவாங்கூர்
னின் கொட்டத்தை
படி அடக்கலாம்—ஐ
பாத் அக்கிரமம் தீர
இது வல்ல அது என்
லாம் ஆளவந்தார்க
அடியெடுத்துக் கொ
மாட்டார்.

ஆம்! பர்மிய வா
பவனி வருவது அழகு
நல்ல முழுமைசிலா! ஆ
இந்திய வானில் உ
வது.................?

தேசீயத் தோழ
உன்னையே நீ எண்ண
பாரு, நாம் பெற்றுள்
முழு விடுதலை தானா எ
தைச் சற்றே நீ சிந்தித்
கூறு.

★ தை முதல் நாள் தமிழர்க்குப் புத்தாண்டு பிறக்கிறது.

★ அதே நாளில் 'போர்வாள்', தன் பொங்கல் மலரைத் தமிழர்க்கெல்லாம் தருகிறது.

விலை அணா 8. தபாலில், அணா 9.

போர்வாள்—பவழக்காரத் தெரு—சென்னை.



# எழுத்தாளர் உலகம்

## . சி. யின் வீரகர்ஜனை

[எழுதியவர்: கி. பிச்ச
த்தி விலை 0-12-0. பதிப்ப
: சமதர்ம நிலையம், குளித்
, திருச்சி.]

ன் முதலில் தென்னாட் வெள்ளை ஏகாதிபத்தி எதிர்த்துப் போர் முரசு டிய வீரர் வ. உ. சி. யின் வாழ்வை அழகு படச் த்துள்ளார் இந் நூலாசிரி சிதம்பரனார் கப்பலோட் திறத்தை மட்டுமல்ல. காந்தீயத்திடம் கொண்டி கசப்பையும் ஒளிக்காது கிறார் தோழர் பிச்ச வ. உ. சி. அங்காளில் புப் பொறி பறக்கப் சொற்பொழிவுகளிற் சில இந்நூலில் இணைக்கப் ருக்கின்றன.

ின் இடை இடையே அச்சுப் பிழைகளும் ப் பிழைகளும் களைந் ப்பட வேண்டும்.

## ா, காவியமோ?

[ஆசிரியர்: மு. வரதராச
எம். ஓ. எல். பக்கம்
விலை 3-8-0 பாரி நிலை
59, பிராட்வே,
னை]

து சிந்தித்துப் பண்பட்ட தினின்று பிறந்த அருமை லக்கியம் இது. "உலகம் ாதது. அவர் நல்லவர்; உலகம் பொல்லாதது." தொடங்குகிற இந் நூல், குடும்ப விளக்கு அணைவ ன்னே ஒரு முறை அழகாக ஒளி வீசிற்று" என்று முடிகிறது. இந்த இரண்டு வாக்கியங்களுக்கு மிடையே உள்ள பகுதிதான் நூல். அது வெறும் கதைக் குவியல் அல்ல. மங்கை அருளப்பன் என்னும் இரண்டு உள்ளங்களின் உண்மைப் படப் பிடிப்பு. காதலர் இருவரும் தம்தம் வரலாற்றை—அல்ல—தம்தம் மனப் போராட்டங்களைத் தாமே, நேரில் கூறும் போக்கில் கதை அமைந்துள்ளது. 'கையில் எடுத்து முதற் பக்கத்தைத் திறந்தால் கடைசிவரை படித்துவிட்டுத் தான் கீழே வைக்கத் தோன்றும்' என்பார்களே, அந்த வகையைச் சேர்ந்ததல்ல இக் காவியம். படித்துக்கொண்டே செல்லும்போது, நூல், பலமுறை, தன்னை மூடி வைத்துவிட்டு, சிந்திக்கத் தூண்டுகிறது நம்மை. இப்படிப்பட்ட அரிய நூல்கள் அடிக்கடி வெளி வருவதில்லை.

## கவிஞர் விழா

[ஆக்கம்: தமிழ்ஒளி விலை
0-6-0. முத்தமிழ் நிலையம்,
75 வரதா முத்தியப்பன் தெரு,
சென்னை]

ஓரங்க நாடகங்கள் ஏழு கொண்ட சிறு நூல். நண்பர் தமிழ் ஒளி தன் முன்னுரையில் குறிப்பிடுவதுபோல, "இதிலுள்ள நாடகங்களின் கருப் பொருள்கள் இன்று தமிழ் நாட்டின் பல்வேறு பாகங்களில் கண்கூடாக நிகழ்வன. உணர்வுடைய எவருக்கும் எழுச்சியை அளிப்பன." கவிஞர் விழா என்ற நாடகம் பாரதி பெயரைக் கூறி தம் பெயரை விளம்பரப்படுத்தும் சுயநலக் கும்பலுக்கு நல்ல சாட்டையடி.

## வாழ்க திராவிடம்

[தீட்டியவர்: க. அன்பழ
கன். விலை 0-4-0. திராவி
டன் பதிப்பகம், வேலூர்.]

திராவிடமா தமிழகமா என்ற பிரச்சினை ஒன்றைக் கிளப்பி, திராவிடக் கழகத்தவர் தமிழர்க்குத் துரோகம் செய்கின்றனர் என்ற விபரீத வியாக்யானம் புரிகின்றனர் சில புதுத் 'தமிழர்கள்'! அவர்கள் உள்ளத்தில் படிந்திருக்கும் புகைப் படலத்தை இரிந்தோடச் செய்யும் பெற்றியது இந்நூல்.

## வரப் பெற்றோம்

[கதிரவன் காலண்டர்கள்:
விலை தனித்தனி அணு 6.
இடம்: 94 C பிராட்வே,
சென்னை]

பெரியார் ஈ. வெ. ரா., திரு.வி.க. இருவர் படம் பொறிக்கப்பட்ட தனித்தனி காலண்டர்கள் கிடைக்கப்பெற்றோம். அழகான அமைப்புடன் மறைந்த மாவீரர்களின் நாட்களும் கொண்டவை.

---

### சந்தாதாரர்கட்கு!

பொங்கல் மலர் சந்தாதாரர்கட்கு இலவசமாக வராது. ஆதலின் பொங்கல் மலர் வேண்டும் சந்தாதாரர்கள் 9 அணு தபால் தலை அனுப்பி, மலர் பெற்றுக் கொள்ள வேண்டுகிறோம்.

### மலர் அட்டைப்படத்தில்!

உழவு, தமிழ்நாட்டின் உயிர்நாடி. அதன் பல்வேறு நிலைகள் அழகுபடச் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன, மலரின் மூன்று நிற ஆர்ட் அட்டைப் படத்தில்.

ஆராய்ச்சி மேடை:

# பகுத்தறிவு இயக்கத்தின் பழமை

[T. S ஸ்ரீபால்]

[திருக்குறள் முதற் பாட்டில் வரும் ஆதிபகவன் என்னும் சொல் பண்டொருநாள், இந்நாட் டில் உலவிவந்த ஓர் சீர்திருத்த வாதியைக் குறிப்பதே அன்றி வேறில்லை என்கிறார் இக் கட்டுரை யாளர். படித்துப்பாருங்கள்.]

இன்று எந்நாட்டிலும் பகுத்தறிவியக்கம் பரவுகிறது. அறிவுக்கு சுதந்திரம் வேண்டுமெனப் பல அறிவாளிகள் மதவாதிகளுடன் போராடுகின்றனர். எத்தகைய பேரறிஞராயினும் அவர்கள் கூறுவனவற்றை அப்படியே ஒப்புக் கொள்வதென்பதைத் தற்கால அறிஞர் உலகம் ஏற்றுக் கொள்ளவில்லை. கண்கள் எவ்வாறு புறப்பொருள்களைத் தெளிவாக அறிகின்றனவோ அவ்வாறு நூற்பொருள்களின் உண்மைகளை நன்கு ஆராய்ந்து அறிய வேண்டுமென்ற உணர்ச்சி மக்களிடையே பெரிதும் பரவி வருகின்றது. பெரும்பாலும் புரட்சி மனப்பான்மை கொண்டவர்களிடையே தான் இவ்வுணர்ச்சி வளர்கின்றது. மதவாதிகளாயினும் சரி, அரசியல் வாதிகளாயினும் சரி, பகுத்தறிவாளர் கொள்கைகளுக்குச் செவிசாய்க்கும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இவ்வியக்கம் மேல் நாடுகளில் வேரூன்றி விட்டது. கீழ் நாடுகளிலும் நன்கு வளர்ச்சிபெற்று வருகின்றது. இத்தகைய பகுத்தறிவியக்கத்தின் பழமையையும் அது தோன்றிய நாட்டையும் தோற்றுவித்த அறிவனையும் பற்றிச் சிறிது ஆராய்வோம்.

நமது தமிழ் மறையாகிய திருக்குறளின் கடவுள் வாழ்த்தின் முதற் குறள் ஆதிபகவனைப் பற்றி அறிவிக்கின்றது. மற்ற ஒன்பது குறள்களும் அவ்வாதி பகவானின் உயரிய பண்பினையே வர்ணிக்கின்றது. ஆதிபகவான் என்பதனாலேயே அவருக்குப் பின், பலர், அவ்வாறே விளங்கினர் என்பது பெறப்படுகின்றது. ஆகவே அவர் முதன்மையானவராகின்றார். ஜைன (சமணம்) சமய நூல்களில் ஆதிபகவானைப் பற்றிய அரிய வரலாறுகள் நமக்குக் கிடைக்கின்றன. ஆதிபகவானெனப் பேசப்படுபவர் நம்மைப் போன்று தாய் தந்தையர் வயிற்றில் பிறந்தவரே. மனைவி மக்களுடன் வாழ்ந்தவர். அரசர்குல தலைவர். அகர முதல வெழுத்துக்களையும் ஒன்று முதலாய எண்களையும் தோற்றுவித்த முதல் ஆசிரியர். சமுதாய சீரமைப்பின் முதல்வர். இல்லறம் துற
ஆகிய இரண்டு அறங்களை வகுத்த அற
அந்தணர். துறவறம் பூண்டு ஐம்பொறிகளை
வென்றவர். வினையின் நீங்கி விளங்கிய அ
பேரா இயற்கை அல்லது பிறவா யாக்கைப்
யோனவர். சிவன், சித்தன், சிவகதி
கன் எனப் போற்றப் பட்டவர். இவரே
நூற்களால் ஆதிபகவன், ஆதிநாதர், ஆதி
என வாழ்த்தப் படுகின்றனர், அவர்தம் இ
பெயர் விரஷபதேவர் என்பது. விரஷப
வடநூல்கள் பலவற்றிலும், இந்துமத சம்
மான வேதங்களிலும், பாகவதம், ஸ்கா
முதலிய புராண நூல்களிலும் சிறப்பாக இ
பெற்றுள்ளார்.

விரஷபதேவர் பேரறிஞர். தாம் கண்ட மெ
பொருள் விளக்கத்தைப் பலருக்கும் போதி
வந்தார். அவர் தம் சொற்பொழிவின் முடி
"எனது அறவுரைகளை அமைதியாகவும் ஆ
கவும் கேட்டு வந்தீர்கள். நீங்கள் என்னை
தெய்வீக புருஷனாகப் போற்றுகின்ற கார
தால் நான் கூறிய அறவுரைகளனைத்தை
அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டுமென நி
காதீர்கள். நிறுத்து அறுத்து, சுட்டு, உ
துப் பொன்கொள்வார்போல எனது உரை
யும் உங்கள் பகுத்தறிவால் நன்கு ஆரா
உண்மைப் பொருளைத் தெளியுங்கள். அ
பின்னர் அப் பொருள்மிசை உங்கள் அறி
செலுத்தி அதன்படி ஒழுகுங்கள். இ
ளூம் முறையே நற்காட்சி, நன்ஞானம்,
லொழுக்கம் என்றழைக்கப்படும்" என
அறிவிற்குப் பூரண சுதந்திரமளித்துப் பேசுவ

"மெய்ப்பொருள் தேறுதல் நற்காட்சி
என நுரைப்
எப் பொருளுங் கண்டுணர்ந்தார்."

என அருங்கலச்செப்பு ஆசிரியரும்,

மெய்ப்பொருள் தெரிதல் மற்றுப்
பொருள் மிசை விரிந்தஞான—

மப் பொருள் வழாத நூலின்
அருந்தகை ஒழுக்கந் தாங்கி—
இப் பொருள் இவைகள் கண்டாய்
இறைவனால் விதிக்கப்பட்ட—
கைப்பொருளாகக் கொண்டு
கடைப்பிடி கனபொற் றூரோய்.—

சூளாமணி ஆசிரியர் தோலாமொழித் தேவ
கூறியலாற்றால் அறியலாகும்.

னவே எத்தகைய பேரறிஞராயினும் எப்
ளாயினும் அவர் கூறவனவற்றை அப்
ப ஏற்றுக்கொள்ளாமல் நமது அறிவால்
ஆராய்ந்தே அப் பொருள்மிசை நமது அறி
செலுத்தவேண்டுமென்ற டகுத்தறி வியக்
ற்று அடிகோலியவர் விருஷபதேவரேயாவர்.

"எப் பொருள் யார் யார் வாய்க்
கேட்பினும் அப்பொருள்
மெய்ப் பொருள் காண்பதறிவு"
"எப்பொருள் எத்தன்மைத்தாயினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு"

திருக்குறளில் தேவரும் மொழிந்தமை
க.

ஷபதேவர் (ஆதிபகவான்) பகுத்தறிவை
படையாக வைத்து அறம் வகுத்தாராகை
ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகிய முத்
ழில்களில் ஈடுபட்டு, அவதாரங்கள் பல
து, பக்தர்களுக்குப் பரிந்து வருவதும் பரி
வருவதுமாகிய திருவிளையாடல்களைப் புரி
டவுளைப்பற்றி எங்கும் எவ்விடத்தும் பேச
. அறிவிற்குப் பொருத்தமில்லாத எந்தக்
கைகளையும் அவர் போதிக்கவில்லை.
பண்பிற்கும், வாழ்விற்கும், ஆன்மவிடுத
ம் வேண்டிய அறங்களையே வற்புறுத்திச்
றூர். மக்கள் அவர்தம் அறிவியக்கத்தை

ஆர்வமொடு ஏற்றனர். அன்றுமுதல் இன்று வரை அவ் வியக்கம் அழியாமல் பல எதிர்ப்புகளுக்கிடையே நன்கு வளர்ந்து வருகிறது.

அறியாமையையும் மூட நம்பிக்கைகளையும் அகற்றி மக்களை மாண்புறச் செய்யும் இப் பகுத்தறி வியக்கத்தைத் திராவிடர் பண்பு எனக் கூறுதல் மிகையாகாது. வரலாற்றுப் பேராசிரியர்களின் ஆராய்ச்சிப்படி திராவிட நாகரிகம் இந்தியா முழுவதும் ஒரு காலத்தில் பரவி இருந்த தென்பதை அறிகின்றோம். இவ்வுண்மையை மேல்நாட்டு வரலாற்று ஆசிரியர்களும் பலசான்றுகளுடன் மெய்ப்பித்துள்ளனர். எனவே ஆதிகால வரலாற்றுப்படி அயோத்தி மாநகரில் பிறந்த விரஷப தேவர் (ஆதிபகவன்) திராவிடரே என்பதும், மெய்யுணர்வு அல்லது பகுத்தறி வியக்கத்தின் முதல்வர் என்பதும் உறுதிப் படுகின்றது. தற்சமயம் இந்தியா கவர்மெண்டில் நிதி மந்திரியாக விளங்கும் ஸர். R. K. ஷண்முகம் செட்டியார் அவர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் சென்னையில் நடந்த மஹாவீரர்ஜெயந்தி விழா அன்று தலைமை வகித்துப் பேசுகையில் ஆரியர் வருவதற்கு முன்பே நம் நாட்டில் திராவிட நாகரிகம் சிறப்புற்றோங்கி இருந்ததென்று கூறிய ஆராய்ச்சியுரை நமது கொள்கைக்கு மிக மிக அரண் செய்கிறது. அறிவியக்கத்தின் தந்தையாக விரஷப தேவர் விளங்கியமையால் அவரை அறிவர் என்றே போற்றினர். வட நூலார் கேவல ஞானி எனக் கூறுவர். திருக்குறளாசிரியர் வாலறிவன் என வாழ்த்தியுள்ளார். விரஷப தேவர் வினைகளை வென்று வீடுபேறு பெற்றமையால் அவரைத் தொல்காப்பியர் "வினையின் நீங்கி விளங்கிய அறிவன்" எனப் போற்றியுள்ளார். எனவே அறிவர் இயக்கம் அகிய இந்தியாவிலும் பரவிற்று. எங்கும் அறவோர் பள்ளிகள் எழுந்தன. தமிழகத்திலும் அவ்வாறே பள்ளிகளும் அறிவர் கோயில்களும் அமைக்கப் பட்டன.

நமது தொண்டைமண்டலப் பகுதிக்கு அறிவர் நாடென்றே பெயர் வழங்கலாயிற்று. புதுக்கோட்டை சித்தன்ன வாசலுக்கடுத்த ஒரு கோயிலின் கல்வெட்டில் அறிவர் கோயில் எனப் பொறிக்கப்பட்டுள்ளது. அங்கே அறிவர் சிலையும் அழ


பொன்னி பொங்கல் மலர்!

பலவர்ண ஓவியப் புதுமைகள்—சிந்தனைச் சிற்பிகளின் கருத்தோவியங்கள்—காட்சியுடன் மிளிரும் கவிதைச்சுவைகள் அனைத்தும் ஆர்ட்தாளில்-¼ கிரவுன் அளவில்—விலை ரூ. 2-8-0 தபாற் செலவுடன் ரூ. 3-0-0.

உங்கள் பிரதிகளுக்கு உங்களூர் ஏஜெண்டிடம் முன் பணத்துடன் முன்னதாகப் பதிவுசெய்து கொள்ளுங்கள்.

'பொன்னி' அலுவலகம்

த. பெ. 39 :: :: புதுக்கோட்டை

காகக் காட்சி யளிக்கின்றது. தமிழகம் இந்த அறிவியக்கத்திற்குத் தாயகமாய் விளங்கிற்று. ஆகவே இங்குப் பல பேரறிஞர்கள் தோன்றினர். அரும் பெருங் காவியங்களையும் நீதி நூல்களையும் இயற்றினர். இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழையும் பற்பல கலைகளையும் வளர்த்துத் தமிழ்த்தாயை அலங்கரித்தனர். மக்கள் அனைவரும் பெருமகன் திருமொழி பிறழா நோன்பினராயினர். தேவமூடம், பாஷண்டிமூடம், லோகமூடம் ஆகிய மும்மூடங்களையும் அகற்றி அறிவாலும் ஒழுக்கத்தாலும் சிறந்தனர்.

கொல்லாமை, பொய்யாமை, கள்ளாமை, பிறர்மனை நயவாமை, கள் குடியாமை, ஊனுண்ணாமை முதலிய நல் ஒழுக்கங்களுடன் மிகு பொருள் உவவாமையை மேற்கொண்டு பகுத்துண்டு வாழ்ந்தமையால் நாட்டில் பொருளாதார நிலை பொது உடைமையாக விளங்கிற்று. பசி, பிணி, பகையின்றி "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற மனப்பான்மையோடு மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தனர். வாணியம், கைத்தொழில் முதலியவைகள் வளர்ந்தோங்கின. வாணிபத்துறையில் அயல் நாடுகளுடன் தொடர்புகொண்டிருந்தனர். இவைகளை, சரித்திரம் சாற்றும்.

இவ்வாறு சிறப்புற்று விளங்கியவர்கள் அனைவரும் அறிவியக்கக்கொள்கையுடையாரே. இவர்களைப் பொய்தீர் காட்சியோர், துகள்தீர்காட்சியோர், மையறுகாட்சியோர், புன்மையில் காட்சியோர் என அழைப்பது பண்டையகால மரபாகும். மேலே கூறிய காட்சிகளுக்கு நற் காட்சி என்றே அடியார்க்கு நல்லார் பொருள் கூறியுள்ளார். இக் காலத்தில் அத்தகையாரைப் பகுத்தறிவாளர் என்றழைக்கின்றனர். இந் நற்காட்சியின் நறுமணம் நமது பண்டைத் தமிழ்க் காவியங்களிலும் நீதி நூல்களிலும் வீசுவதைக் காணலாம்.

"இலம் என்று வெஃகுதல் செய்யார் புலம் வென்ற
புன்மையில் காட்சியவர்."

"பொருடீர்ந்த பொச்சாந்துஞ் சொல்லார்
மருடீர்ந்த மாசறு காட்சியவர்."

"செயிரிற் றலைப்பிரிந்த காட்சியார் உண்ணார்
உயிரிற் றலைப்பிரிந்த ஊண்."

"இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்."

எனத் திருக்குறளிலும்

"..............................

கையறு நெஞ்சம் கடியல் வேண்டும்
பொய்தீர் காட்சிப் புரையோய்போற்றி"

என, சிலப்பதிகாரத்தில் மாதவி, தன் கா[ரு]கிய கோவலனுக்கு எழுதிய ஓலையிலும் [கு]றிப்பிடப்பட்டுள்ளன. மாடலன், செங்குட்டுவ[னை]ச் சந்தித்துப் பல அறவுரைகள் பகர்ந்[து] முடிவில் இவைகள் யாவும்,

"பொய்யில் காட்சியோர் பொருளுரை [...]
வின்" எனக் கூறிமுடிக்கிறான். சீவக [சிந்தா]மணியின் ஆசிரியரை அதன் உரை சிறப்புப் [பாயி]ரத்தில்,

"பொய்யா மொழி புகழமை யுறு காட்[சித்]
திருத் தகு முனிவன்"

எனப் புகழ்ப் பட்டுள்ளது. வளையாபதியில்

"துக்கத் துடைக்கும் துகளறு காட்சி
நிக்சந்த வேடத் திருவடி கணங்க[ள்]"

என நற்காட்சியையுடைய துறவிகளைப் போ[ற்றப்] பட்டுள்ளது. இவ்வாறே பகுத்தறிவு [உடை]யாரின் தமிழ் நூல் பலவற்றுள்ளும் நற்கா[ட்சி]யுடையார் நன்கு பாராட்டப் பட்டுள்ள[னர்]. எனவே நற்காட்சி அல்லது பகுத்தறிவு [இயக்கம்] மிக மிகப் பழமையுடைய தென்பதும் அது[வே] விட நாகரிகமே என்பதும் வெள்ளிடை போல் விளங்குகிறது.

---

பாசறையின் புது வெளியீடு!

திராவிடஸ்தான் வேண்டாமா?

★

கம்யூனிஸ்ட்—திராவிடக் கழகத்தவர்
எழுத்துப் போர்.

★

விலை அணு 8. தபாலில் அணு 9

பகுத்தறிவுப் பாசறை

147, பவழக்காரத் தெரு, சென்னை 1.

## ...ம் புண்ணியம்!

...ம் பக்கத் தொடர்ச்சி)

...னுக்கு அப் பெண்ணைக்
...வத்தார்கள், ஒரு வாரம்
...கழியவில்லை. ஊரெல்லாம்
...ளம் வந்திருந்ததல்லவா,
... சமயம் மின்சார விளக்
...ம் நின்றுவிட்டது. ஏதோ
...செய்ய 'சூப்ரெண்ட்' கூப்
...ப்பினராம். சென்றவிடத்
...ரண்டில்' அடிபட்டு இறந்து
...ன். மாதமும் இரண்டாகி
...ப்பா பாவம். சிறு பெண்"

...ப்படியானால் அவள் கதி!"

...ர் என்ன செய்வது. அது
...தலைவிதி சீக்கிரம் வா சாப்
...ன்றாள்.

...ர் மிக வருந்தினான். முன்
...அவளுக்கு வாக்குக் கொடுத்
...வன் மனக்கண்முன் தோன்
... அவள் விருப்பம் அறிய
...கொண்டான்.

...ர்ப்பத்தை எதிர் பார்த்தான்.
... மங்கியவேளை. வீட்டில்
...தனியே இருப்பதறிந்தான்;
...ாகவே உள் நுழைந்தான்.
...பத்தைத் தெரிவித்தான்.
...ல் கூறினான். அவள் சமூ
...கு அஞ்சினாள்.

...லம்! சொல்வதைக் கேள்.
...உனக்கு உறுதி கூறியது
...ருக்கலாம், நாமிருவரும்
... கொள்ளலாம், என்
...ீ வாழ்க்கையை......"

...ன் விதவை".

...ன் அறியாமலில்லை, வி...
...! முதல் வாரத்தில் கன்
...பெண். மறு வாரத்தில்
... கன்றுயிருக்கிறது!"

...ருகில் நெருங்கினான்,
...ம் சாதித்தாள். அவள்
...ப் பிடித்தவாறு 'கமலம்,
...ப்பார். நான் அதைப்
...படுத்தவில்லை, உன் விருப்
...ன் இப்பொழுது தேவை'
...ன் சேகர்.

...ங்கள் அறியாததா, அன்றே
...உள்ளத்தையும் உடலையும்
...பணித்து விட்டேன்.
..."

"ஆனால் என்ன?"

"பெற்றோர் சம்மதம்..."

"பார்த்துக்கொள்வோம்."

"சமூகம்?"

"ஆம் பழமையிலும், மூட நம்பிக்கையிலும் திளைத்த சமூகம். மறுமணம் ஆடவர்கட்கு மட்டும் உரித்தானது என்று சொல்லும் சமூகம், ஒரு புற மிருக்கட்டும். அதைப் பற்றிக் கவலை யில்லை."

"சரி நேரமாகிறது. நீங்கள் வீட்டிற்குப் போங்கள்"

"அம்மா அப்பாதான் கோவிலுக்குச் சென்றவர்கள் வர நாழியாகுமே...சரி...நீ அவனை மணக்க எவ்விதம் இசைந்தாய்?"

"கலப்பு மணம் வேண்டுமெனச் சொல்லுகின்ற ஆடவர்களே தங்கள் விருப்பைப் பெற்றோரிடம் தெரிவிக்க அஞ்சும்போது, நான்..."

"'நான்' பெண்தானே" என்கிறாய்"

"ஆம். இந்த ஆடவர்களே அப்படித்தானே! காரியம் ஆகும்வரை, "தேனே, மானே, கண்ணே, மணியே, என்பார்கள். பின்.........

"கண்ணெடுத்தும் பாரார்" ஏன் அப்படித்தானே சொல்ல வந்தாய்? அக்குழுவில் என்னையும் சேர்த்து விடாதே கமலம். சற்று முன் கூறியதுபோல் 'விதவை' யென நீ நினைக்கலாம்.—சமூகம் நினைக்கலாம். ஆனால் நான் கமலம் என்றுதான் நினைக்கிறேன், கமலத்தை—வாட, வதங்க—கருக விடமாட்டேன்."

"உண்மையாகவா"

"சந்தேகம் ஏன். கவலை விடு. கண்டிப்பாய்க் கைவிடேன். அஞ்சாதே" என்று தலையில் அடித்தான். கமலம் சேகர் மார்பில் சாய்ந்துகொண்டாள்.

"பாவம். பெண்தானே. அஞ்சுகின்றாள். அவளைக் குறைகூறிப் பயன் என்ன" என்று தனக்குள் எண்ணியவாறே அவளது மிருதுவான கன்னத்தைத் தடவிக்கொண்டிருந்தான்.

கோவிலுக்குச் சென்றவர்கள் வந்து கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. 'சட்'டென்று சேகர் பின்புறமாக வந்து தன் வீட்டை அடைந்தான்.

சேகருக்குத் திருமணப் பேச்சு நடந்து கொண்டிருந்தது. பலர் பெண் கொடுக்க முன் வந்தனர். எந்தப் பெண்ணையும் ஏதாவது குறை கூறி நிராகரித்து விடுவான். கடைசியில் தன் தாயின் வாயிலாக தந்தையிடம் தன் எண்ணத்தை எடுத்துக் கூறினான்.

"ஏண்டா படித்ததின் பலனா இது. நம்ம ஜாதியென்ன? அவள் ஜாதியென்ன? அதுவும் விதவை. நம் அந்தஸ்து எங்கே? அவளெங்கே! இதெல்லாம் பைத்தியக்காரத்தனம். இந்த எண்ணத்தை விட்டுவிடு."

"அப்பா, கோபித்துக்கொள்ள வேண்டாம். அவளது வாழ்க்கையை உய்விக்க வேண்டியது என் கடமை" என்றான்.

தந்தை பலபடியாகச் சீறினார். என்னவெல்லாமோ திட்டினார். சேகர் அசையவில்லை.

மறுநாள். முத்தையாவை—கமலத்தின் தந்தையைச்—சந்தித்தான் சேகர். சேகரிடம் மரியாதை காட்டி வந்தார் முத்தையா. கமலத்தின் நிலை குறித்து வருந்தி மிகவும் பரிவு காட்டினான்.

"நம்மால் ஆவது ஒன்றில்லை. யாவும் ஈசன் செயல்" என்றார்.

"அவளது பிற்கால வாழ்வு இப்படியேதானா? வயது பதினாறு கூட முடிந்திருக்காது, அதற்குள் கைம்பெண்ணா? கடைசிவரை காலத்தை இப்படியே கடத்த வேண்டியதுதானா"

"ஆமாங்க! வேறென்ன செய்ய முடியும்" என்று பெருமூச்செறிந்தார் முத்தையா.

"இதற்குத்தானா அவள் பிறந்தாள். நான் ஒன்று கூறுகிறேன் கேளுங்கள்."

"என்ன."

"வேறு யாருக்கும் மறுமணம செய்துவிட்டால்!"

"தம்பி சிறுபிள்ளைத் தனமாய்ப் பேசாதே. இது நமக்கு அடுக்

ளுமா? இனிமேல் இப்படியெல்லாம் பேசாதே" என்றார்.

"கோபம் வேண்டாம். காலத்தின் போக்கைச் சொன்னேன், சமூகம் இவள் நிலைக்கு இரங்காமல் போகாது. பிறகு உங்கள் விருப்பம்" என்று சொல்லிவிட்டுப் பிரிந்தான்.

"'விதவை, விதவை' எனக் கூறி பெண்களை வாழாவெட்டியாக்கும் சமூகமே! கற்பைக் காத்தாலும் காக்கவொட்டாது காமப் படுகுழியில் ஆழ்த்தும் சமூகமே! கண்ணியமாய் வேறொருவனை நாடு நகரமறிய மணக்கவொட்டாத சமூகமே! பெண்களை ஆண்கள் அடிமையாக்கச் சதி செய்யும் சமூகமே! உனக்கு அழிவு காலம் என்று வரும்? நானே முதலில் உனக்குப் புதை குழி தோண்டுகிறேன்" என்று மெதுவாய்க் கூறிக் கொண்டே நடந்தான்.

முத்தையா சமூகத்தின் கட்டுப்பெட்டி. அவரால் என்ன செய்ய முடியும்? ஒருவாரங் கழிந்தது. கமலமும் சேகரும் காணவில்லை. முத்தையா ஆற்றொணாத் துன்பக் கடலில் ஆழ்ந்தார், சேகரைத் திட்டினார்.

காலச்சக்கரம் வெகு வேகமாய்ச் சுழன்றது. இரு வருடங்கள் ஓடி மறைந்தன. இரு வீட்டாரும் மிகக் கவலைகொண்டிருந்தனர். நாட்கள் செல்லச் செல்ல மக்கட் பாசம் அவர்களை வாட்டியது. இங்கும் அங்கும் ஒரே பிள்ளை; கேட்கவா வேண்டும். கமலமும் சேகரும் மகிழ்ச்சியாய் வாழ்க்கையை நடத்துவதைக் கேட்டாலே போதும் என்ற அளவிற்கு வந்துவிட்டனர்.

ஒரு நாள் திடீரென்று முத்தையாவிற்கு ஓர் கடிதம் வந்தது. அதை எடுத்துக்கொண்டுபோய் சேகரின் அப்பாவிடம் கொடுத்து "இதைப் படித்துக் காட்டுங்கள்" என்றார்.

அவர் பிரித்தார்.

சேகர், சென்னை.

அன்புமிக்க மாமா!...............

கமலம் நலமாகவே இருக்கிறாள். எங்கள் விருப்பத்தை உங்களிடம் கூறியும் நீங்கள் கேட்கவில்லை, உண்மைக் காதலை எந்தக் கருவியும் தடை செய்யாது, செய்யவும் முடியாது. ஆகையால் நாங்கள் இங்கு வந்துவிட்டோம். எங்கள் அன்பின் சின்னமாகச் "சுந்தரம்" காட்சியளித்துக் கொண்டிருக்கிறான். அடிக்கடி 'தாத்தா, தாத்தா' என்று சொல்லிக்கொண்டிருக்கிறான்....................

அதற்குமேல் அவரால் படிக்க முடியவில்லை. கடிதம் கீழே விழுந்தது. முத்தையா அதை எடுத்துக் கொண்டு ஓடினார் வீட்டிற்கு.

"அடியே அடியே, நம்ம கமலத்துக்கு ஆம்பளப் பிள்ளை பொறந்திருக்காம்"

முனியம்மாள் முகம் உண்மையில் அப்பொழுது 'கமலம்' போலத்தானிருந்தது.

"போகட்டும் சாமிபுண்ணியத்திலே நல்லாயிருந்தாச் சரி. அது முகத்தே எப்போ பாக்கக் கொடுத்து வைக்குதோ" என்று சொல்லிக்கொண்டே அவள் குலதெய்வத்திற்கு ஒரு கும்பிடு போட்டாள்.

—


# பொங்கல் மலரில்!

—

சிந்திக்கத் தூண்டும் சிறுகதைகள்,

அநுபவத்தைப் பிழிந்தெ[டுத்த] கட்டுரைகள்,

புரட்சித் தலைவர்கள் ப[ற்றிய] விளக்கங்கள்,

உயிரை, உணர்வை எழுப்[பும்] கவிதைகள்

வண்ணப் படங்கள் இரண்டு

★

அனைத்தும் உண்[டு]



# இவர்களின் கைவண்ணம்!

—

தலைவர் பெரியார், அறிஞர் அண்ணாதுரை, 'விடுதலை' குருசாமி, தோழியர் குஞ்சிதம், நண்பர் இராதாமணாளன், முருகு—சுப்பிரமணியம், திருவாளர். தாமரைக் கண்ணியார், பேராசிரியர் வரதராசனார், வித்துவான் விசு. திருநாவுக்கரசு, தோழர் டி. கே. சீனிவாசன், புலவர் முடியரசன், கவிஞர் தமிழ் ஒளி, அன்பர் குயிலன் ஆகியோரின் கைவண்ணம் போர்வாள் பொங்கல் மலரை அ[லங்கரிக்கச்] செய்கின்றது.

சிந்தனைக்கு விருந்து, இவர்கள் தம் சிற[ந்த] எண்ணங்கள், அதுதான் உங்கட்கு முன்ன[மே] தெரியுமே!


Edited Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoli[yan]
[...] 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A.